2020 ஜனவரி 9]

ஆழ்துளை கிணறு பழுதுபார்க்கப்பட்டு, மாணவியருக்கு போதிய குடிநீர் வசதி செய்து தரப்பட்டுள்ளது.

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *வினாக்கள்-விடைகள் நேரம் முடிவுற்றது.*

[**குறிப்பு:** *ஓர் உரையின் தொடக்கத்தில் உடுக்குறி (*) இடப்பெற்றிருந்தால் அவ்வுரை உறுப்பினரால் சரிபார்க்கப்பெற்றது என்பதைக் குறிக்கும்.*]

3. தகவல் கோரல்

(அ) குடியுரிமை திருத்தச் சட்டம் குறித்து சட்டமன்றத்தில் தீர்மானம் நிறைவேற்றக் கோருதல்

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்கள்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு எதிர்க்கட்சித் தலைவராக இருக்கக்கூடிய எங்களுடைய தலைவர் தேசிய குடியுரிமை திருத்தச் சட்டத்தைக் குறித்து, மத்திய அரசைக் கண்டித்து இந்த அவையில் ஒரு தீர்மானத்தை நிறைவேற்ற வேண்டும் என்று ஒரு தீர்மானம் கொண்டுவந்து கொடுத்தார். அது என்னவாயிற்று என்று மறுபடியும் தங்களிடத்திலே கேட்டார். அது தங்களுடைய ஆய்வில் இருப்பதாக தெரிவித்தீர்கள். எனக்கு உங்களைப் பற்றித் தெரியும். நீங்கள் ஆய்ந்து முடிவெடுத்து இப்போது எடுத்துக்கொள்வீர்கள் என்ற தைரியத்தோடுதான் நான் கேட்கிறேன். அதை இப்போது எடுத்துக்கொள்வீர்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: இப்போதும் அது ஆய்வில்தான் இருக்கிறது. (சிரிப்பு)

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இன்றைக்குதான் சபை முடிகிறது. எப்போது நீங்கள் ஆய்வுக்கு எடுத்து, எப்போது கொண்டுவருவது? எனவே, அருள்கூர்ந்து கொண்டு வாருங்கள். பக்கத்திலே இருக்கக்கூடிய கேரளாவில் அவர்கள் எடுத்திருக்கிறார்கள்.*

[2020 ஜனவரி 9

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *மாண்புமிகு எதிர்க்கட்சித் துணைத் தலைவர் அவர்களே, அவையெல்லாம் இன்னொரு மாநில சட்டமன்றத்தில் நடைபெற்றவை. எனவே, அதுகுறித்து இங்கே விவாதிக்க வேண்டாம். இங்கே கொடுத்திருக்கிறீர்கள். அது என் ஆய்வில் உள்ளது.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, ஆய்வு என்றால் எப்போது? சபை முடிவுக்கு வரப்போகிறதே!*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *உரிய நேரத்தில் உரிய பதிலைச் சொல்கிறோம்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, அப்படியென்றால், இந்தச் சபை இன்றைக்கு முடிவதற்குள் எடுத்துக்கொள்வீர்களா?*

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *இல்லை, ஆய்வில் இருக்கிறது என்றால், எப்போது வேண்டுமானாலும் சீக்கிரம் எடுத்துக்கொள்ளப்படும்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, இந்த மாதிரி ஆய்வு இருந்தால், ஒரு விஞ்ஞானமும் வராது, ஒரு முடிவும் வராது. ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது என்றால் எப்படி?*

(திராவிட முன்னேற்றக் கழகத்தைச் சார்ந்த உறுப்பினர்கள் எழுந்து நின்றனர்.)

மாண்புமிகு பேரவைத் தலைவர்: *ஆய்வு முடிந்தவுடன் உங்களுக்குத் தெரிவிக்கிறேன். உரிய நேரத்தில் உரிய நடவடிக்கை எடுக்கப்படும்.*

திரு. துரைமுருகன்: *மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, தங்கள்மீது மரியாதை வைத்திருக்கிறோம். நீங்களே இப்படி ஆய்வில் இருக்கிறது, ஆய்வில் இருக்கிறது என்று, இதை எடுத்துக்கொள்ளாமல் இருப்பதற்கு என்ன மறைமுகமாக செய்கிறீர்களோ என்று குற்றஞ்சாட்டக் கூடாது. ஆகையினால், இதைக் கண்டித்து நாங்கள் வெளிநடப்புச் செய்கிறோம்.*

(திராவிட முன்னேற்றக் கழக உறுப்பினர்கள் வெளிநடப்புச் செய்தனர்.)